**செய்தி வெளியீடு எண்: 662** **நாள்:06.11.2012**

## அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் தினம், 2012

ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் திங்கள் 3ஆம் நாள் அன்று "**அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் தினம்**" கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்வாண்டும் தமிழகத்தில் அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் தினம் வருகிற 3–12–2012 அன்று அனுசரிக்கப்பட உள்ளது. இதனையொட்டி மாற்றுத் திறன் படைத்த மாணவ/மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும். மேலும், மாற்றுத் திறனாளிகளுக்கு உதவி உபகரணங்களும், மாற்றுத் திறனாளிகளுக்கு சிறந்த முறையில் சேவை புரிந்தோருக்கு மாநில விருதுகளும் வழங்கப்படும்.

- மிகச் சிறப்பாக பணியாற்றி / சுயதொழில் புரிந்து வரும் கை, கால் பாதிக்கப்பட்ட, பார்வைத்திறன் பாதிக்கப்பட்ட, செவித்திறன் பாதிக்கப்பட்ட, மனவளர்ச்சி குன்றிய மற்றும் தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்த மாற்றுத் திறனாளிகளுக்கும்,

- மிகச் சிறந்த முறையில் மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்புக் கல்வி / பயிற்சி அளிக்கும் சிறப்பு ஆசிரியர்களுக்கும்,

- மாற்றுத் திறனாளிகளுக்கு மிகச் சிறப்பாக மறுவாழ்வு உதவிகளை அளித்து வரும் தொண்டு நிறுவனங்களுக்கும்,

- மாற்றுத் திறனாளிகளுக்கு தன்னலமற்ற சேவை புரிந்துவரும் சமூகப் பணியாளர்களுக்கும்,

- மாற்றுத் திறனாளிகளுக்கு அதிக அளவில் வேலை வாய்ப்பு வழங்கி வரும் தொழில் நிறுவனத்திற்கும்,

- அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் மாற்றுத் திறன் படைத்த மாணவ / மாணவிகளுக்கு சிறப்பான முறையில் கல்வி அளித்து வரும் தொண்டு நிறுவனங்களுக்கும் மாநில விருதுகள் வழங்கப்படவுள்ளதால் அவ்விருதுகளுக்கான பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் உரிய படிவத்தில் **15–11–2012**க்குள் வரவேற்கப்படுகின்றன.

விண்ணப்பப் படிவங்கள் தங்கள் பகுதியைச் சார்ந்த **மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகத்திலிருந்தோ அல்லது மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரகம், மாநில வளம் மற்றும் பயிற்சி மைய வளாகம், அரசு புற மருத்துவமனை (பின்புறம்), ஜவஹர்லால் நேரு உள்வட்ட சாலை, கே.கே. நகர், சென்னை – 600 078.** என்ற அலுவலகத்திலிருந்தோ நேரில் பெற்றுக் கொள்ளலாம்.

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**